# Balakrishnan Velaiah, IPS

## NEW ARTICLES

## Police Akka News Clips



↑ புதுக்கோட்டையில் 'போலீஸ் அக்கா' திட்டத்தை தொடங்கிவைத்து, விழிப்புணர்வு போஸ்டரை வெளியிட்ட எஸ்.பி. வந்திதா பாண்டே.

### புதுக்கோட்டையில்

# 'போலீஸ் அக்கா' திட்டம் தொடக்கம்

● புதுக்கோட்டை

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக புதுக்கோட்டையில் 'போலீஸ் அக்கா' எனும் திட்டம் நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்டது.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதிபடுத்தவும், பாலியல் ரீதியான பிரச்சினைகளை தீர்க்கவும் கோவையில் காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் சில ஆண்டுகளுக்கு முன்பு 'போலீஸ் அக்கா' எனும் திட்டத்தை செயல்படுத்தினார். இதன் மூலம் பள்ளி, கல்லூரிகளில் காவலர்களை நியமித்து, பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இந்த திட்டம் டிஜிபியின் உத்தரவைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே பேசியது:

மாவட்டத்தில் 'போலீஸ் அக்கா' திட்டத்தில் பள்ளி, கல்லூரிகளில் 30 காவல் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த காவலர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடுவர்.

மேலும், அவ்வப்போது பள்ளி, கல்லூரி பொது நிகழ்வுகளில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு ஏற்படும் உளவியல் ரீதியிலான மற்றும் பாலியல் ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணச் செய்வார். மேலும், பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வு காணப்படும்.

பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு நல்லசகோதரியாக காவலர்கள் செயல்படுவர். மாணவ, மாணவிகள் பகிரும் கருத்துகள் ரகசியமாக வைக்கப்படும். இதுகுறித்து கல்வி நிலையத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேலும், அந்தந்த கல்வி நிலையத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள காவலரின் பெயர், செல்போன் எண், கியூஆர் கோடுடன் கூடிய போஸ்டர் கல்வி நிறுவனங்களில் ஒட்டப்படும் என்றார்.

# போலீஸ் அக்கா திட்டத்துக்கு கல்லூரி மாணவிகள் வரவேற்பு

**ஒவ்வொரு போலீஸ் நிலையங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உதவி மையம் செயல்பட்டு வருகிறது.**

கோவை, மார்ச்.6-

கோவையில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மாநகர போலீசார் சார்பில் போலீஸ் அக்கா திட்டம் கடந்த 2022ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்துக்கு கல்லூரிக்கு ஒரு பெண் போலீஸ் வீதம் 60 போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

போலீஸ் அக்கா திட்டத்துக்கான போலீசார் அடிக்கடி சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு சென்று அங்கு படித்து வரும் மாணவிகளுடன் கலந்துரையாடி பொது இடங்களில் வாலிபர்கள் தொந்தரவு கொடுத்தால் உடனடியாக தெரிவிக்கும் படி தங்களின் செல்போன் நம்பரை கொடுத்து தைரியப்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக எண்ணற்ற கல்லூரி மாணவிகள் போலீஸ் அக்காவை தொடர்பு கொண்டு தங்களுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவுகளை வெளிப்படையாக தெரிவிப்பதால் போலீசார் அதிரடியாக செயல்பட்டு சம்பவ இடங்களில் குற்றவாளிகளை உடனுக்குடன் கைது செய்ய முடிகிறது.

கோவையில் கல்லூரி மாணவிகளுக்கான போலீஸ் அக்கா திட்டம் மட்டுமின்றி மாநகரில் இயங்கி வரும் பள்ளிகளில் காவல்துறை சார்பில் ஆபரேஷன் ரீபூட் திட்டம் செயல்படுத்தப் பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பள்ளிக்கு செல்லாமல் இடைநின்ற குழந்தைகளின் பெற்றோரை போலீசார் நேரடியாக சந்தித்து பேசி, அந்த பிள்ளைகளை மீண்டும் பள்ளியில் சேர்த்து



படிக்க செய்து வருகின்றனர்.

கோவை மாநகரில் அமலில் இருக்கும் போலீஸ் அக்கா மற்றும் ஆபரேஷன் ரீபூட் ஆகிய திட்டங்கள் குறித்து மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் கூறியதாவது:

கல்லூரி மாணவிகளின் பிரச்சனைகளை நட்புரீதியில் தெரிவிக்க ஏதுவாக செயல்படுத்தப் பட்டு உள்ள போலீஸ் அக்கா திட்டத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதன்மூலம் கடந்த ஆண்டு மட்டும் 400க்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டு அவற்றுக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டு உள்ளது. மேலும் மாணவிகள் தெரிவித்து உள்ள கருத்துக்களின்படி அனைத்து பஸ்களிலும் கேமரா பொருத்தும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

ஒவ்வொரு போலீஸ் நிலையங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உதவி மையம் செயல்பட்டு

வருகிறது. பெண்கள் குறித்த புகார்கள் வந்தால் உடனடியாக போலீசார் புறப்பட்டு சென்று நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கண்ட பணிகள் நடைபெறு கிறது. பெண்களுக்கு தேவையான உடனடி நடவடிக்கைகள், சட்டரீதியான நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பை தொடர்ந்து உறுதிசெய்வது ஆகிய 3 கோணங்களில் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இதற்கான நடைமுறைகள் டிஜிட்டல் தொழில்நுட்பம் வாயிலாக பதிவு செய்யப்படுகின்றன.

பள்ளி செல்லாமல் இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்கும் ஆபரேஷன் ரீபூட் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு பள்ளிகளுக்கும் போலீசார் நேரடியாக சென்று பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

---

# மாணவிகளை காக்கும் 'போலீஸ் அக்கா'



**திட்டத்துக்கு வரவேற்பால் தமிழகம் முழுவதும் செயல்படுத்த முடிவு**



கல்லூரி மாணவிகளின் பாதுகாப்புக்காக கடந்த 2022ம் ஆண்டு 'போலீஸ் அக்கா' என்ற திட்டத்தை கோவையில், மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இந்த திட்டம் தமிழகத்தில் கோவை மாநகர போலீசில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் மாணவிகள் தாங்கள் சந்திக்கும் பிரச்னைகளை தயங்காமல் போலீசில் தெரிவிக்கவும், பாலியல் அத்துமீறலில் இருந்து அவர்களை பாதுகாப்பதுமே ஆகும்.

முன்பெல்லாம் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வதே அபூர்வமாக இருக்கும். "அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு?" என்ற சொல் வழக்கும் உண்டு. அதன்படி, 50 ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்தில் உள்ள பெண் குழந்தைகள் பள்ளிப்படிப்பை முடிப்பதே அரிதாக இருக்கும். ஒரு சில பெற்றோரே, அதுவும் வசதி வாய்ப்பு மிக்கவர்களே தங்கள் மகளை பட்டணம் அனுப்பி மேல் படிப்பு வைத்து அரசு வேலை உள்ளிட்ட உயர் பொறுப்புகளில் அமர வைத்து அழகு பார்த்தனர். ஆண்டுகள் கடந்தோட தற்போது அனைத்தும் மாறிவிட்டது. பெண் குழந்தைகள் படிப்பதை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. அரசு பள்ளிகளில் படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம், பாலிடெக்னிக், ஐடி படிக்க விரும்பும் மாணவிகளுக்கு உதவித்தொகை போன்றவை அவர்களின் கல்வியை ஊக்குவித்து வருகிறது. இதனை பெற்றோர் பெரிதும் வரவேற்று அரசை பாராட்டி வருகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க அரசும், காவல் துறையும் மாணவிகள் பாதுகாப்பில் முழு கவனம் செலுத்தி வருகின்றனர். மாணவிகள் சந்திக்கும் பிரச்னைகளை தீர்க்கவும், அவர்கள் படிப்பை தொடர எந்த இடையூறும் ஏற்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டும் கோவை மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் எண்ணத்தில் உதித்ததுதான் 'போலீஸ் அக்கா' திட்டம்.

இந்த திட்டத்தின்படி, 15 நாட்களுக்கு ஒரு முறை பெண் காவலர்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று மாணவிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர். அதன்படி, கோவையில் 70க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவையில் போலீஸ் அக்காவாக 37 பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். மாணவிகளுக்கு ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால் அதனை தீர்க்கும் பணிகளில் இந்த போலீஸ் அக்காக்கள் செயல்படுவார்கள்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரி ஒருவர் கூறியதாவது: போலீஸ் அக்கா திட்டத்தின் படி, மாணவிகள் படிக்கும் கல்லூரிகளுக்கே பெண் காவலர்கள் நேரடியாக செல்வார்கள். அவர்கள் மாணவிகளிடம் கலந்துரையாடி, நட்போடு பழகி, அவர்களுக்கு வீட்டின் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள் மூலமாகவோ, கல்லூரிகளிலோ ஏதாவது அசவுகரியமாக உணர்ந்தால் தங்களிடம் தெரிவிக்கலாம் என சகோதரிகள்போல உரிமையாக கேட்பார்கள். பொதுவாக மாணவிகள் தாங்கள் சந்திக்கும் பாலியல் அத்துமீறல்கள், கேலி, கிண்டல் ஆகியவற்றை வெளியில் சொல்ல தயங்குவார்கள்.

குறிப்பாக பெற்றோரிடமே அவர்கள் சொல்வது கிடையாது. இது குறித்து யாரிடம் சொல்வது என்ற அவர்களின் மனக் குழப்பத்தை தவிர்க்கவே இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு கல்லூரியிலும், பெண் காவலர்களின் தொடர்பு எண்கள் ஒட்டப்பட்டுள்ளன. மேலும் கியூ ஆர் கோடும் ஒட்டப்பட்டுள்ளது. இதில் அந்த கல்லூரிக்கு பொறுப்பாளராக உள்ள பெண் காவலர்களின் பெயர், கைபேசி எண் ஆகியவை இடம்பெற்றிருக்கும். மாணவிகள் இதனை ஸ்கேன் செய்து இதன் மூலம் தயங்காமல் போலீசில் புகார் அளிக்கலாம்.

யார், யார் புகார் அளித்தார்கள்? என்பது அந்த மாணவியின் நெருங்கிய தோழி, ஆசிரியர்கள் என யாருக்கும் தெரியாமல் ரகசியம் காத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் துவங்கப்பட்டது. தற்போது வரை சுமார் 495 புகார்கள் வந்துள்ளன. அதில் 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 50 புகார் மீது சிஎஸ்ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவிகளுக்கு வாட்ஸ் அப்பில் குறுந்தகவல் அனுப்பி தொந்தரவு செய்வது, காதலிக்கும்போது பிரச்னை ஏற்பட்டால் அவர்கள் செல்போனில் சேர்ந்து எடுத்த புகைப்படங்கள், வீடியோவை காட்டி மிரட்டுவது போன்ற புகார்கள் அதிகளவில் வருகின்றன. இந்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுத்து மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம். இந்த திட்டத்துக்கு தற்போது, மாணவிகள், பெற்றோர் இடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

சமீப காலமாக பள்ளி, கல்லூரிகளில் பாலியல் புகார்கள் வருகின்றன. கல்வி நிலையங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த சில நாட்களுக்கு முன்பு தலைமை செயலாளர் முருகானந்தம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் மாநிலம் முழுவதும் கலந்துரையாடல் கூட்டம் நடத்தினார். கோவை நிர்மலா கல்லூரியில் நடந்த இந்த கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகர போலீஸ் கமிஷனர் பால கிருஷ்ணன், கல்லூரி முதல்வர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அப்போது தலைமை செயலாளர் முருகானந்தத்திடம் கோவை மாநகரில் செயல்படுத்தப்பட்டு வரும் 'போலீஸ் அக்கா' திட்டம் குறித்து விளக்கப்பட்டது. அப்போது, தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டத்தை செயல்படுத்த கோவை மாநகர போலீசார் சார்பில் முன்மொழியப்பட்டது.

தற்போது இந்த திட்டம் மாணவர்கள், பெற்றோரிடம் நல்ல வரவேற்பை பெற்றதை தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் செயல்படுத்த முனைப்பு காட்டி வருகின்றனர். எனவே விரைவில் இந்த திட்டம் தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் செயல்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு செயல்படுத்தப்பட்டால் மாணவிகள் பாலியல் தொந்தரவால் பாதிக்கப்பட்டு தங்களது பிரச்னைகளை யாரிடம் சொல்லலாம் என்றிருந்த மன குழப்பம் தீரும். போலீஸ் அக்காவால் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். கோவை மாநகரில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த போலீஸ் அக்கா திட்டம், மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் பட்சத்தில் கல்லூரி மாணவிகள் நிச்சயம் பாதுகாப்பாக உணர்வார்கள்.

**மாணவர்களுக்கு 'போலீஸ் புரோ'**

மாணவர்களுக்காக கோவை நகரில் 'போலீஸ் புரோ' என்ற திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில், கல்லூரி மாணவர்கள் ராகிங், போதைப்பொருள் சம்பந்தமாக தங்களது கல்லூரிகளில் நியமிக்கப்பட்ட காவலர்களிடம் புகார் அளிக்கலாம்.

**சுய கட்டுப்பாடு, சுய ஒழுக்கம் கடும் தண்டனை தேவை**

போலீஸ் அக்கா திட்டம் குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், 'மனித வாழ்க்கையில், சுய ஒழுக்கம், சுய கட்டுப்பாடு இல்லாவிட்டால் பெண்களுக்கான வன்முறைகள் குறைவதற்கு சாத்தியமில்லை. சமீபத்தில் டெல்லியில் மருத்துவ மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டார். கிருஷ்ணகிரியில் என்சிசி பயிற்சிக்கு சென்ற மாணவி பாலியல் தொந்தரவால் பாதிக்கப்பட்டார். இந்த சம்பவம் நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எனவே இது போன்ற குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை மற்றவர்களுக்கு பாடமாகவும், பயம் கொள்ளும்படியும் அளிக்க வேண்டும். அப்போதுதான் பாலியல் குற்றங்களை ஓரளவுக்காவது குறைக்க முடியும்' என்றனர்.

# போலீஸ் அக்கா... பொண்ணுங்களுக்கு 'சேப்டி' பக்கா!

பாரதி பாடிய 'மனதில் உறுதி வேண்டும்...பிறர் வாடப் பல செயல்கள் செய்து...நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ' போன்ற வார்த்தைகளைப் படிக்கும் எந்தப் பெண்ணும், சின்னச்சின்ன கஷ்டங்களுக்காக வாழ்க்கையை முடித்துக் கொள்ள மாட்டாள். ஆனால் மனதில் அந்த உறுதியை ஏற்படுத்த...உனக்கு நான் துணையிருக்கிறேன் என்று சொல்ல ஒரு குரல், ஆறுதலாய் ஒரு கரம் தேவை.

அந்த ஆறுதலையும் ஆதரவையும் தருகிறார் போலீஸ் அக்கா...கோவையில், இளம்பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றச்சம்பவங்களை தடுக்க கோவை மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன், கடந்த சில மாதங்களுக்கு முன் துவக்கியதுதான் இந்த 'போலீஸ் அக்கா' திட்டம். இத்திட்டத்தில், 60 கல்லூரிகளுக்கு ஒரு பெண் போலீஸ் வீதம் 60 எனும் திட்டத்தை துவங்கினார்.

இத்திட்டத்தின் படி, கோவையில் உள்ள, 60 கல்லூரிகளுக்கு தலா ஒரு பெண் போலீஸ் வீதம், 60 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாணவியருடன் அவ்வப்போது கலந்துரையாடி, அவர்களை யாராவது தொந்தரவு செய்தாலோ, உதவி தேவைப்பட்டாலோ தங்களை அழைக்கலாம் என்று உதவி வருகின்றனர். இதற்கு பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

போலீஸ் அக்காவாக பணிபுரிந்து வரும் ஸ்ரீலேகாவிடம் பேசினோம்...

ஒரு பெண்ணின் தாயார் உயிரிழந்து விட்டார். பெண் என்பதால் அவரை பெரியம்மாவுடன், தந்தை அனுப்பி வைத்தார். ஆனால், அங்கு பெரியம்மாவின் கொடுமைகள் தாங்க முடியவில்லை. அந்த பெண் எங்களை தொடர்பு கொண்டார். அந்த பெண்ணை நாங்கள் மீட்டு, தந்தையுடன் அனுப்பி வைத்தோம்.

இதேபோல், தனியார் பஸ் கண்டக்டர்கள், பஸ்ஸில் பயணம் செல்லும் கல்லூரி பெண்களை கிண்டல் செய்வதாக நிறைய புகார்கள் வந்தன. அந்த கண்டக்டர்களைப் பிடித்து எச்சரித்துள்ளோம். மறுமுறை நடந்தால் சட்டரீதியான நடவடிக்கையை எடுக்கிறோம். பெண்கள் கல்லூரிகளில் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம்.

நிறைய பெண்கள், தங்களுக்கு நடக்கும் கொடுமையை வெளியில் சொல்லாமல் முடங்கி விடுகின்றனர் அல்லது தங்களையே முடித்துக் கொள்கின்றனர். அதை உடைத்து, இப்போது பலரும் எங்களிடம் மனதைத் திறந்து பேச ஆரம்பித்துள்ளனர். அவர்களின் பிரச்னைகளை நெருங்கி கேட்பதுடன், தீர்வும் தருவதால் பெண்களிடம் இத்திட்டத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**சபாஷ்...சரியான முயற்சி!**

---

*தினமணி*

## 'போலீஸ் அக்கா' திட்டம்

# பெண் காவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

**திருநெல்வேலி, அக்.18:** திருநெல்வேலி மாநகரில் உள்ள கல்லூரிகளுக்கு 'போலீஸ் அக்கா' திட்டத்தின் கீழ் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் ரூபேஷ் குமார் மீனா மேற்பார்வையில், காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) அனிதா கண்காணிப்பில் மாநகரத்தில் உள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவிகளின் பாதுகாப்பு மற்றும் நன்மைக்காக போலீஸ் அக்கா என்ற திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு பெண் காவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாநகர போலீஸ் அக்கா திட்டத்தில் நியமிக்கப்பட்ட பெண் காவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், திருநெல்வேலி மாநகர காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) அனிதா பங்கேற்று, ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு பெண் காவலர் தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கல்லூரிகளுக்கு 15 நாள்களுக்கு ஒரு முறை சென்று மாணவிகளுடன் கலந்துரையாடல் நடத்த வேண்டும். கலந்துரையாடலின் போது மாணவிகளுக்கு ஏற்படும் பிரச்னைகள் குறித்து உடனுக்குடன் தெரியப்படுத்தும் விதமாக போலீஸ் அக்காவின் தொலைபேசி எண்ணை மாணவிகளுக்கு கொடுக்க வேண்டும், மாணவிகளிடம் இருந்து பெறப்படும் தகவல்கள் ரகசியம் காக்கப்படுவதுடன், இதுகுறித்து உடனடியாக துரித விசாரணை மேற்கொண்டு சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் , போலீஸ் அக்காவிடம் மாணவிகள் எந்த தயக்கமும் இன்றி தகவல்களை தெரிவிக்கவும், காவல் துறைக்கும் மாணவிகளுக்கும் போலீஸ் அக்கா ஒரு பாலமாக இருந்து செயல்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

# ‘அக்கா’.... மாணவியர் பாதுகாப்பில் ‘பக்கா!’

## கமிஷனர் திட்டத்துக்கு வரவேற்பு ● ஓராண்டில் 400 வழக்குகள் பதிவு

**கோவை, மார்ச் 6–**

கோவையில், கல்லூரி மாணவியர் பாதுகாப்புக்கென போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் அறிமுகப்படுத்திய, 'போலீஸ் அக்கா' திட்டம், மாணவியர் மத்தியில் பலத்த வரவேற்பை பெற்றுள்ளது. கடந்த ஓராண்டில், 400க்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மாணவியர் வேண்டுகோளின் படி, பஸ்களின் உள்ளே கேமரா பொருத்தும் திட்டம், விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், தொடர்ந்து நடக்கின்றன. பள்ளி, கல்லூரி செல்லும் மாணவியர், வீட்டில் இருக்கும் பெண்கள், பணிக்கு செல்லும் பெண்கள், என எந்த வேறுபாடு இல்லாமல், வன்கொடுமை தொடர்கிறது.

இதுதவிர, பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. பெண்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த, கோவை மாநகர போலீஸ் சார்பில், போலீஸ் அக்கா திட்டம் துவங்கப்பட்டது.

பயந்து ஒதுங்கி நிற்கும் பெண்களுக்கு ஆதரவாக, ஒரு கரம் நீளும் போது, அது உற்ற துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி ஒரு துணையை ஏற்படுத்தத்தான், மாநகர போலீசார் திட்டமிட்டு, 'போலீஸ் அக்கா' திட்டம், 2022ம் ஆண்டு துவங்கப்பட்டது.

திட்டத்தில், 60 கல்லூரிகளுக்கு ஒரு பெண் போலீஸ் வீதம், 60 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாணவியருடன் கலந்துரையாடி, அவர்களுக்கு யாரும் தொந்தரவு கொடுத்தால், தங்களை அழைக்கலாம் என தைரியம் கொடுக்கின்றனர். இத்திட்டத்துக்கு பெண்கள், கல்லூரி மாணவியரிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. கடந்த ஓராண்டில், 400க்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் கூறியதாவது:

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும், பெண்கள், குழந்தைகளுக்கான உதவி மையம் செயல்படுகிறது. பெண்கள் குறித்த புகார்கள் வந்தால், உடனே சென்று போலீசார் உதவுகின்றனர்.

மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து, இப்பணியை மேற்கொள்கின்றனர். பெண்களுக்கு தேவையான உடனடி நடவடிக்கைகள், சட்டரீதியான நடவடிக்கைகள், பாதுகாப்பை தொடர்ந்து உறுதி செய்வது, ஆகிய மூன்று கோணங்களில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த அனைத்து நடவடிக்கைகளும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன. பள்ளி செல்லாமல் இடைநின்ற குழந்தைகளை, மீண்டும் பள்ளியில் சேர்க்க, 'ஆபரேஷன் ரீபூட்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதுதவிர, ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து, விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது.

கல்லூரி மாணவியர் அவர்கள் பிரச்னையை, நட்பு ரீதியில் தெரிவிக்க 'போலீஸ் அக்கா' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

கடந்த ஓராண்டில் மட்டும், 400க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன. அவற்றுக்கு தீர்வும் காணப்பட்டுள்ளது. மாணவியர் தெரிவித்த கருத்துக்களின்படி, அவர்களின் பாதுகாப்புக்காக பஸ்களில் கேமரா பொருத்தும் திட்டம், விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

# ‘போலீஸ் அக்கா’ திட்டத்தில் 2024ல் 1,66,337 பயனர்கள் பதிவு




காவல்துறை மானிய கோரிக்கையின் போது தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்புடைய இணையவழி குற்றங்கள் மற்றும் உதவி எண்கள் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 'போலீஸ் அக்கா' திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தில் 'காவல் உதவி செயலி' பெண்களுக்கு உதவுவதற்காக பிரபலப்படுத்தப்பட்டு, புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024ம் ஆண்டில் 1,64,337 பயனர்கள் காவல் உதவி செயலியில் பதிவு செய்துள்ளனர். 649 போக்சோ வழக்குகளில் தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


TRINITY MIRROR





# “Police Akka” scheme to ensure safety of girl students

Namakkal, Nov 14: IGP, west zone T Senthil Kumar alongwith the District Collector Dr S Uma inaugurated the 'Police Akka' scheme at Tiruchengode Vivekananda College for Women campus. DIG (Salem range) S Uma, Namakkal District SP Rajesh Kannan besides Prof. Dr. M.Karunanithi, Chairman and Secretary, Vivekanandha Educational Institutions for Women were present.

The IGP in his address said that the chief minister is giving top priority for the security of the women members and added that several schemes were being implemented keeping in view of the safety of girl children by focusing on the importance of girl child education. Moreover, the IGP elaborated on the "Police Akka" scheme wherein the State Government is committed towards the safety of women besides their education.

Under the "Police Akka" scheme, he said that this is aimed at making it easier for female students to seek help for issues like cybercrime without hesitation. Through the 'Police Akka' initiative, 136 women police personnel have been deployed across 323 private and government schools and 99 colleges in Namakkal district.

The project facilitates the students to share any info about the issues faced by them as an elder sister, ensuring their identity is protected. Further, he highlighted the dire need for educating girl students on the prevailing laws and Acts on women's safety. They will be free to air their complaints or any issues to the women constable deployed to the respective educational institutions.

Regional Joint Director of Collegiate Education Sindhiya Devi, CEO Maheswari, District Social Welfare and Women Empowerment Officer Gayathri, District Child Protection Officer Sathish besides coordinators from schools and colleges were present at the event.

தினமணி

புதன்கிழமை, 13 நவம்பர் 2024

# ‘போலீஸ் அக்கா’ திட்ட ஆலோசனைக் கூட்டம்

**மதுரை, நவ. 12:** மதுரை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகத்தில் 'போலீஸ் அக்கா' திட்ட ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழகக் காவல் துறை சார்பில், மாநிலம் முழுவதும் 'போலீஸ் அக்கா' என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, மதுரை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகத்தில், இந்தத் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மதுரை மாநகரக் காவல் ஆணையர் ஜெ.லோகநாதன் தலைமை வகித்தார். காவல் துணை ஆணையர் மதுகுமாரி, கூடுதல் துணை ஆணையர், மாநகரக் காவல் நிலையங்களில் பணிபுரியும் 95 மகளிர் காவல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மதுரை நகரில் உள்ள 185 பள்ளிகள், 25 கல்லூரிகளுக்கு மகளிர் காவல் தொடர்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் மாணவிகளுடன் வாரம் ஒரு முறை கலந்துரையாடி, மாணவிகள் தெரிவிக்கும் உளவியல், பாலியல், போதைப் பொருள்கள், குடும்பம், சமூக ரீதியான பிரச்னைகள் இருப்பின், அவற்றைக் கண்டறிந்து எவ்வாறு தீர்வு காண வேண்டும் என்பது குறித்து காவல் ஆணையர் ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும் மாணவிகள் பகிரும் பிரச்னைகள், தகவல்கள் ரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.



# கன்னியாகுமரி மாவட்டத்தில் “போலீஸ் அக்கா” திட்டம்

**நாகர்கோவில், நவ.20**

கன்னியாகுமரி மாவட்டத்தில் “போலீஸ் அக்கா” திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பெண் காவலர்களுடன் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேற்று கலந்துரையாடினார்.

• கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம், மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவிகள் பாதுகாப்பு மற்றும் காவல்துறை தொடர்புக்காக “போலீஸ் அக்கா” திட்டத்தை தொடங்கியிருந்தார்.

நேற்றுமுன்தினம் மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் வைத்து “போலீஸ் அக்கா” திட்டத்தில் நியமிக்கப்பட்ட பெண் காவலர்களுடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கலந்துரையாடி பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

• மாணவிகள் பாலியல் ரீதியான பிரச்சனைகள், குடும்ப வன்முறைகள், வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக காவல்துறையை எளிதாக அணுகும் வண்ணம் போலீஸ் அக்காவின் தொலைபேசி எண் மாணவிகளுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

• மாணவிகளிடம் இருந்து பெறப்படும் தகவல்கள் ரகசியம் காக்கப்படுவதுடன், இதுகுறித்து உடனடியாக துரித விசாரணை மேற்கொண்டு அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்று சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

• போலீஸ் அக்காவிடம் மாணவிகள் எந்த தயக்கமுமின்றி தகவல்களை தெரிவிக்கவும், காவல் துறைக்கும், மாணவிகளுக்கும் “போலீஸ் அக்கா” ஒரு பாலமாக இருந்து செயல்பட வேண்டும்.

“ போலீஸ் அக்கா” திட்டத்தில் நியமிக்கப்பட்ட பெண் காவலர்கள் நேரடியாக மாணவிகளுடன் கலந்துரையாடி சட்டத்தின் உரிமைகளை எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் பேசினார்

•இந்நிகழ்வின் போது நாகர்கோவில் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் லலித்குமார், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மதியழகன், துணை காவல் கண்காணிப்பாளர்கள் மகேஷ் குமார், பார்த்திபன், நல்லசிவம், சந்திரசேகர், செந்தாமரைக்கண்ணன், ஜோசப் மற்றும் தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் பெர்னார்ட் சேவியர் ஆகியோர் உடனிருந்தனர்.